DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 190/2015 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 8 | Caste | : |
| Name | : வாசுகி | Calling | : |
| Father / Husband Name | : செல்லப்பாண்டி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 25th March 2025.

---

**(1வது எதிரி காணொலி மூலம் ஆஜர், 2வது எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் இளையான்குடி மாதா கோவில் தெருவில் குடியிருந்து வருகின்றேன். நான் வீட்டுக் குடித்தனம் செய்து வருகின்றேன். சம்பவ சமயம் என் கணவர் கத்தாரில் வேலை செய்து வந்தார். என் கணவருக்கு சொந்த ஊர் குண்டாக்குடை. 1 வது எதிரி கார்த்திக்குமார் என் கணவரின் தம்பி ஆவார். வழக்கின் 2 வது எதிரி எங்கள் ஊர்க்காரர். வழக்குப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பாக போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள வாசுகி என்ற கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தேதி, மாதம் ஞாபகமில்லை சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து என்னுடைய தங்கச் செயினை வாங்கிக் கொண்டார்கள். 1 வது எதிரி கார்த்திக்குமார் எங்கள் வீட்டிற்கு வந்து சாப்பாடு கேட்டதால் நான் கொடுத்தேன் மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

---

web copy

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1) 1 வது எதிரி என் வீட்டிற்கு வந்து சாப்பாடு கேட்டதாக சொல்லும் தேதி 03.03.2014 என்றால் சரிதான். மதிய சாப்பாடு கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது 1 வது எதிரியுடன் 2 வது எதிரி வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வந்து செல்லும்போது 1 வது எதிரி இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சுமார் 3 பவுன் எடைகொண்ட தங்கச் செயினை என்னிடம் கொடுத்து அவர் வெளியூர் செல்வதாகவும் திரும்ப வந்து வாங்கிக் கொள்வதாகவும் என்று சொல்லி அவர் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

2) மேற்படி செயினை எதிரிகள் இருவரும் குறுந்தணி அருகில் ஒரு பெண்ணிடம் திருடி வந்தது என போலீசார் 2 வது எதிரியுடன் வந்து சொன்னபோது தெரிந்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. திருடிய செயின் என்பதால் தான் அதனை நான் போலீசாரிடம் கைப்பற்றுதல் மகஜரில் ஒப்படைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய செயினை போலீசாரிடம் நான் எதற்காக கொடுத்தேன் என்றால் என் கணவர் வெளிநாட்டில் இருந்ததால் கொடுத்தேன் மிரட்டி வாங்கிக் கொண்டார்கள். மிரட்டி வாங்கினார்கள் என்று சொல்லி நான் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

3) அன்றைய தேதியிலிருந்து நாளது தேதி வரை செயினை திரும்ப பெறுவதற்காக நான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த செயின் என் வீட்டில் திருமணத்தின் போது போட்டது. என்னுடையது என்பதைக் காட்டக் கூடிய ரசீதோ, ஆவணமோ வைத்துள்ளேனா என்றால் இல்லை. திருட்டுச் செயின் என்பதால் தான் நான் அதனை போலீசாரிடம் ஒப்படைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் உண்மையிலேயே அது என்னுடைய செயினாக இருந்தால் அதனை திரும்ப பெறுவதற்காக நான் சட்டபடி நடவடிக்கைகள் எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

webcopy

4) வழக்கு 1வது எதிரி என் கணவரின் தம்பி என்பதாலும் அவருக்கு ஆதரவாகவும் திருட்டுச் செயினை நான் பெற்றதை திரும்ப போலீசாரிடம் ஒப்படைத்துவிட்டு கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்து விட்டு சம்பவத்தை மறைத்து போலீசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1வது எதிரி எனது வீட்டில் எப்போது சாப்பிட்டார் என்றால் என்னால் கூற இயலாது. எனது திருமணத்திற்குப் பிறகு எனது கொழுந்தனுடன் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். நான் எனது நகையை போலீசார் வாங்கிச் சென்றது சம்பந்தமாக ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் எனது கணவருக்கு உடல் சரியில்லாததால் அப்போது புகார் கொடுக்க முடியவில்லை. நான் எழுதாத வெள்ளைத் தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்யும் போது போலீசார் வேறு யாரையும் 1 வது எதிரியை அழைத்து வரவில்லை என்றால் சரிதான். கையெழுத்துப்போட்ட நாள், தேதி, மாதம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கைப்பற்றிய நகை எனக்கு சொந்தமான நகை என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 25.03.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

webcopy

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 190/2015 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 9 | Caste | : |
| Name | : ராதாகிருஷ்ணன் | Calling | : |
| Father / Husband Name | : முருகேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 25th March 2025.

---

**(1வது எதிரி காணொலி மூலம் ஆஜர், 2வது எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை (சாட்சி காணொலி காட்சி மூலம் சாட்சியம் அளிக்கிறார்):-**

நான் தற்சமயம் கோவை மாவட்டம் கருமத்துப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் காளையார்கோவில் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த சமயம் 03.03.2014 ம் தேதி 14.00 மணிக்கு மேற்படி காவல் நிலையப் பொறுப்பிலிருந்தபோது குறுந்தனி கிராமத்தைச் சேர்ந்த ஆண்டியப்பன் மனைவி புஷ்பவள்ளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பதிவு செய்து புகாரின் தன்மைக்கு ஏற்ப காளையார்கோவில் காவல் நிலையக் குற்ற எண்.69/2014 பிரிவு 392 ன் கீழ் வழக்குப் பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையினை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 சிவகங்கை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி

Web copy

வைத்து புலன் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

புகார் வாக்குமூலம் காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கு காரணம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் குறித்த அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான் 27 வயதுக்குட்பட்ட 2 நபர்கள் என்று கூறியுள்ளேன். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் நபர்கள் எந்த வாகனத்தில் வந்தனர் என்றும் அதன் பதிவு எண், கலர் குறித்து புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் கணவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது புகார்தாரருடன் அவரது கணவரும் வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார். புகார்தாரரின் கணவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்பதால் அவருக்கு நன்கு எழுதப்படிக்கத் தெரிந்திருந்த நிலையில் நான் அவரிடம் புகார் எழுதி வாங்காமல் நான் வாக்குமூலமாகப் பதிவு செய்துள்ளேன் என்றால் அவர்கள் பதட்டத்தில் இருந்ததால் புகார்தாரர் சொன்ன வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் எந்த தேதி, நேரத்தில் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்பதனை குறிப்பிடவில்லை என்றால் சரிதான் துரித முதல் தகவல் அறிக்கை என்பதால் உடனேயே அனுப்பி வைத்தேன். நான் சொல்வது போல் சொன்ன நாள், தேதியில் புகார்தாரர் என்னிடம் எந்த புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் பின்னிட்டு இவ்வழக்கு கோப்பிற்காக ஒரு பொய் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 25.03.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

webcopy